# நிலையாமையும் அறமே

# Instability is also Virtuous

***முனைவர் நெ. சுதா***
தமிழ்த்துறை, கௌரவவிரிவுரையாளர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி

**Dr. N. Sudha**
*Guest Lecturer in Tamil*
*Government Arts and Science College, Sivakasi*

**ஆய்வுச் சுருக்கம்**

*உலகமக்கள் நன்மை பெற வேண்டி தமிழ்ச்சான்றோர்கள் தம் பட்டறிவு ஞானத்தாலும், மக்களுக்கு நல்ல வழியினைக் காட்டும் கடப்பாடு உடையவர்களாகவும் விளங்கிய காரணத்தால் தமிழ் இலக்கியங்களில் அறக்கருத்துக்கள் நிறைந்துள்ளன. சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை அறக்கருத்துக்கள் பரவியுள்ளன. எனினும் சங்க மருவிய காலத்திலிருந்தே அறக்கருத்துக்களைக் கூறுவதற்கென்றே அறஇலக்கியங்கள் தோற்றம் பெற்றன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அற இலக்கியங்களாக விளங்கும் பதினொன்று இலக்கியங்களை ஆய்வு எல்லையாகக் கொண்டு அவைகளில் இடம் பெற்றுள்ள நிலையாமைக் கருத்தின் வழியாக அறக்கருத்தை எவ்வாறு எடுத்துரைத்துள்ளது என்பதை ஆய்வதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.*

***முக்கியச் சொற்கள்:***

*அற இலக்கியங்கள், அகம், புறம், அறம், நாலடியார், திருக்குறள்*

**Abstract**

*Whiteness refers to the fact that it comes without any fainting, without mixing with any other sin or other sinner's. Tamil scholars may have composed songs that are similar to the sinful venpa of purity because the philosophies instruct human purity. It was the duty of the Charity Literary Asians to express their views in the lowest possible order. So Venpa Yap come up with a pa that can be explained in less steps. Due to its simplicity, the internal and external literatures in over a dozen texts may have been based on it. Literary scholars should have centered on the concept of instability and the need to be aware of the state of mind and worldview, as well as the restricted way of life in order for man to stand on his own two feet. He believed that not only world philosophies but also charitable literary geniuses could adopt the theme of instability as a way of expressing instability and expressing opinions. Eva has proven that she can express instability with a beautiful simple style in venpayapu.*

***Keywords:***

*Tolkappier, Sangam Literary, Marriage, Pleasure, Two Mothers*

**Citation**

Sudha, N. "Instability Is Also Virtuous." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 41–47.

**அற இலக்கியங்கள்**

*பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அகம், புறம், அறம் தொடர்பான செய்திகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளன. இதனுள் அறச்சிந்தனைகளை மட்டும் வடித்துக்கூறும் நூல்களாக 11 இலக்கியங்கள் கருதப்படுகின்றன. அவை: திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஆசாரக்கோவை, ஏலாதி, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, முதுமொழிக்காஞ்சி. இவ்விலக்கியங்கள் அறச்செய்திகளை மட்டும் தனித்துக்கூறிய போதிலும் திருக்குறள், நாலடியார் என்னும் இவ்விரு நூல்கள் மட்டும் அறம், பொருள், காமம் என மூன்றையும் கூறுவதாக அமைந்துள்ளன.*

**அறஇலக்கியங்களின் அமைப்பு**

*அறிவுறுத்தும் பாங்கிற்கு ஏற்ற ஓசையாகிய செப்பலோசையைக் கொண்ட வெண்பா யாப்புடன் அறஇலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன. அறவுரையை அறிவுறுத்துவதே முதன்மைக் கடமையாக கொண்டுள்ளன இவ்விலக்கியங்கள் எனவே இதன் மொழிநடையானது நேரடியாகச் சொல்லும் நோக்கில் முன்னிலையில் செய்க, செய்யாதே என்றும் இது செய்வது தக்கது/நல்லது, தகாதது/தீயது என்று கூறும்பாங்கிலும் பெரும்பான்மையும் அமைந்துள்ளன. மேலும் அறிவுரையை நேரடியாகச் சொல்லுவதைக் காட்டிலும் பிறிதொரு பொருளைச் சான்றாகக் காட்டி உவமையணி, உருவக அணி, வேற்றுமையணி என அணிகள் பயின்றும் வந்துள்ளன, இத்தகைய அணிநயங்கள் வருவதனால் மனதில் நல்ல சிந்தனைகளை நிலைநிறுத்துவதற்கு ஏதுவாக அமைந்துள்ளன. எளிமை மற்றும் கற்கும் ஆர்வத்தூண்டல் கருதி இவ்விலக்கியங்களில் சில பாடல்கள் தவிர ஏனையவை அனைத்தும் ஈரடி முதல் நான்கடி வரையிலான பாடல்களாக இடம்பெற்றுள்ளன. மேலும் மனனம் செய்வதற்கு எளிமையாக இருக்க வேண்டி, மோனை, எதுகைத்தொடையுடன் அமைக்கப்பட்டுள்ளன. வெண்பா: யாப்புருவும் காரணங்களும்*

*சங்க மருவிய காலத்தில் தோன்றிய அறஇலக்கியங்கள் அனைத்தும் ''வெண்பா'' வாகவே உள்ளன. இவை செப்பலோசை பெற்று வருவன. (செப்பல் - சொல்லுதல்), ஒருவரிடம் நேரடியாகச் சொல்லுவதற்கு ஏற்ற வகையில் செப்பலோசையே அமைகின்றது. எனவே அறிவுறுத்தி ஒன்றைச் சொல்லும் தன்மைக்கேற்ற வகையில் சொல்லும் ஓசை நயம் பெற்ற செப்பலோசையையே அறஇலக்கியக் கவிஞர்கள் கையாண்டுள்ளனர். எனவே செப்பலோசை கொண்ட வெண்பாவைக் கொண்டு, பாடல்கள் புனைந்தும் தம் கருத்திலும் எத்தகைய தொய்வும் இன்றியும் பாடல்கள் இயற்றப்பட்டன.*

*மேலும் வெண்பா என்பது வெள்ளைத்தன்மை கொண்டதாக சுட்டப்படுகின்றது. வெள்ளைத்தன்மை என்பது வேறு எந்தப்பாவும், ஏனைய பாவினுடைய தளைகளும் கலக்காமல் எத்தகைய மயக்கமும் இன்றி வருகின்ற தூய்மைத்தன்மையினைச் சுட்டுகின்றது. அறஇலக்கியங்கள் மனிதமனத்தூய்மையை அறிவுறுத்தும் காரணத்தினாலே தமிழ்ப்புலமையுடைய புலவர்களும் தூய்மைத் தன்மையுடைய பாவாகிய வெண்பாவைத் தேர்ந்து பாடல்கள் புனைந்திருக்கலாம்.*

*அறிவுரையாக இருந்தாலும் அளந்தே கூறவேண்டும், அளவுக்கு மீறினால் அமிழ்தமும் நஞ்சு என்பது போல் குறைந்த அடிகளில் உயர்ந்த கருத்துக்களைக் கூற வேண்டிய கடப்பாடு அறஇலக்கிய ஆசிரியர்களுக்கு இருந்தது. எனவே குறைந்த அடிகளில் விளக்க இயலும்*

*“பா” வாக விளங்கும் வெண்பா யாப்பினைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இதன் எளிமை கருதியே பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள அக, புற இலக்கியங்களும் இதனை அடியொற்றியே இயற்றப்பட்டிருக்கலாம்.*

**அற இலக்கிய கருப்பொருள் அமைப்பு**

*அறஇலக்கியங்களின் நோக்கமே மனிதவாழ்க்கையில் ஓர் ஒழுங்குமுறையை ஏற்படுத்தவும், சீரானக் கட்டுப்பாடான வாழ்வை வாழவும், சமுதாயம் மேம்படவும் - தனிமனித ஒழுக்க நிலைகள், சமுதாய ஒழுக்கநிலைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. பிறருக்குத் தீங்கு செய்யாமை, நன்மையே எண்ணுதலும் செய்தலும், கல்வி, ஈகை, அறிவு, செல்வம், விருந்தோம்பல், பண்பு, ஒழுக்கம், அடக்கம், நட்பு, உண்மை முதலான நற்சிந்தனைகளை விதைக்கும் நற்கருத்துக்கள் கருப்பொருள்களாக அமைந்துள்ளன. இவ்விலக்கியங்களில் இல்லற வாழ்விற்கும் துறவற வாழ்விற்கும் தேவையான அறக்கருத்துக்கள் எடுத்தாளப்படுகின்றன. மேலும் இதனூடே நிலையாமை குறித்த கருப்பொருளும் காணப்படுகின்றது.*

**நிலையாமை**

*நிலையாமைகுறித்தசிந்தனைசமயத்திற்கு மட்டும் உரித்தானதன்று. சமயவாதிகளிடமும், தத்துவவாதிகளிடமும், இயற்கையை உள்ளடக்கிய சக்தியை மட்டும் நம்பும் அறிவியல்வாதிகளிடமும் (புதவாதிகள்) இக்கருத்து உண்டு. இந்த உலகில் மாற்றம் ஒன்றே நிலைத்து நிற்பது, எதவும் நிலையில்லாதது என்று கூறுவது தத்துவ நோக்கில் அமைந்துள்ளது. அத்தகைய தத்துவம்சார் பொருள் அறஇலக்கியங்களில் மையப்பொருளாக (கருப்பொருளாக) அமைந்தது எவ்வாறு? அதன் தேவை என்ன? அறத்திற்கும் நிலையாமைக்கும் உள்ள தொடர்பு யாது? என வினா எழுகின்றது. அதற்கு விடை காண முயலும்பொழுது, மனிதன் அறவழியில் நின்று ஒழுகுவதற்குக் கட்டுப்பாடான வாழ்க்கைமுறை மட்டுமல்லாமல் மனப்பக்குவப்பட்ட நிலையும் உலக நடப்பியலையும் அறிந்திருத்தல் வேண்டும் என்னும் நோக்கில் நிலையாமை உணர்தலையும் அறஇலக்கியப்புலவர்கள் கருப்பொருளாக மையப்படுத்தியிருக்க வேண்டும் என்னுமாறு பொருளுய்த்துணர முடிகின்றது.*

**காலந்தோறும் நிலையாமை குறித்த பதிவுகள்**

*மொழிநூலார் தொல்காப்பியரும் புறத்திணையில் பல்வேறு போர் வகைகளைக் கூறிய பின்னர், காஞ்சித்திணையில் நிலையாமை குறித்த சிந்தனையைப் பதிவிடுகின்றார்.*

***“பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்***
***நில்லா உலகம் புல்லிய நெறித்தே” (புறம். 18)***

*இவ்விடத்தில் நிலையாமை என்னும் கருத்து பேசப்படுகின்றது. இதில் பல போர்களைப் பற்றி விவரித்தவர், போர் செய்வதே வாழ்க்கைக் கடமை என்று வாழ்ந்து விடாமல், உலகநியதியை உணர்ந்து ஒற்றுமையுடன் வாழவும் முற்பட வேண்டும் என்னும் நோக்கில் போர் செய்வதற்கான எல்லையை வகுத்துக் கொடுத்திருக்க வேண்டும். இக்கருத்தை அடியொற்றியே சங்க இலக்கியமாகிய மதுரைக்காஞ்சியும் பாடப்பட்டுள்ளது.*

*சங்கமருவியகாலக் காப்பிய நூல்களிலும் நிலையாமை குறித்த சிந்தனைகள் தொடர்ந்தன. பதினெண்கீழ்க்கணக்கு அறஇலக்கியங்களில் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம், ஏலாதி, இனியவை நாற்பது, பழமொழி நானூறு ஆகிய*

*ஏழு நூல்களில் நிலையாமை குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் குறிப்பிடும் நிலையாமையின் வகைமைகளாக பல்சார் பொருள்நிலையாமை, செல்வநிலையாமை, யாக்கை (உடல்) நிலையாமை, இளமை நிலையாமை முதலானவை சுட்டப்பட்டுள்ளன.*

**நிலையாமை உணர்தலின் தேவை**

*செல்வநிலையாமை: செல்வநிலையாமையை அறஇலக்கியங்கள் முன்னிறுத்துவதற்கு முதன்மைக் காரணம், பெருஞ்செல்வத்துடனான மனித வாழ்வு பேராசையைத் தோற்றுவிக்கும், ஒரு மனிதன் பணவசதி வாய்க்கப்பெற்ற செல்வந்தனாக மாறும்பொழுது, பிறமனிதர்களின் நலன் குறித்த எண்ணம் எழுவதும் சமுதாயத்தின் மீதான அக்கறையும் மிகச்சொற்பம். அந்நிலையில் செல்வநிலையாமையையும் உலகியல் அறிவையும் உணர்ந்தவன் பிறா ின் துயர் கண்டு உதவாமலும், செல்வம் சேர்ப்பது ஒன்றே வாழ்க்கைக் குறிக்கோளாகவும் கருதமாட்டான் என்னும் நோக்கில் இவை போன்ற கருத்துக்கள் அறஇலக்கியங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன.*

*யாக்கை நிலையாமை: உடல் மீது கொண்ட பற்று அதனைப் பாதுகாப்பது என்பதனையும் தாண்டி, அதனை அலங்கரிப்பது போன்ற பல வீண்செலவுகளுக்கும் பற்றுதலுக்கும் ஆட்கொள்ளச் செய்யும். எனவேதான் எந்த நேரத்திலும் எமன் வந்து உயிரை எடுக்கலாம், நேற்றிருந்தவன் இன்று இல்லாமல் போகலாம், நின்றான் கிடந்'தான் இறந்தான் என்று நிகழ்வது தான் உலகியல் இயல்பு என்று கூறி, உலகியல் நன்மைக்காக இருக்கும்பொழுதே நல்லது செய்க என்னுமாறு உள்ளது.*

*இளமை நிலையாமை: இளமை நிலையாமை குறித்த பதிவு நாலாடியாரில் மட்டுமே விரிவாக காணமுடிகின்றது. நாலாடியாரை இயற்றிய சமண முனிவர்களிடமிருந்த சமணக் கருத்தையும் இதில் காணமுடிகின்றது. பெண்ணிடமிருக்கும் இளமை அழகு நிலையில்லாதது, அதை எண்ணி வாழ்நாளை வீணடிக்க வேண்டாம் என்பனப் போன்ற கருத்துக்களும், நம்மிடமிருந்த இளமை போய்விட்டால் சுற்றம், நட்பு முதலானோரின் அன்பும் போய்விடும். எனவே, இளமையில் இருக்கும்போதே நல்லறங்களைச் செய்து வாழும் வாழ்வை வற்புறுத்தினர்.*

**நிலையாமை - உவமைகளும் உருவகங்களும்**

*நிலையாமை குறித்த கருப்பொருள் பற்றிக் குறிப்பிடும் நிலையில் உவமை மற்றும் உருவக அணி போன்ற உருவமைப்புக்கள் தோன்றும் நிலையில் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இவை கவிதைக்குச் சுவை சேர்ப்பதாயும், மனதில் நிலைநிறுத்துவதாயும் அமைந்துள்ளன. சான்றுக்குச்சில பதிவுகள்: பறவை கூட்டை விட்டு பறப்பது போன்றது உயிர் உடலை விட்டுப்பிரிவது (குறள்.338), கூத்து நடக்கும் அரங்கிற்கு மக்கள் கூடும் கூட்டம் போல செ ல்வமும் சேரும், கூத்து முடிந்த பின் மக்கள்கூட்டம் கலைவது போல நாம் சேர்த்த செல்வமும் அழியும் (குறள்.332) என்பனப் போன்ற உவமைகளும், கூற்றுவன் சூரியனை நாழி என்னும் அளவைக் கருவியாகக் கொண்டு, மனிதனின் வாழ்நாள் என்னும் தானியத்தை நாள்தோறும் உண்பான்(நாலடியார்.7) என்பனப் போன்ற உருவகங்களும் நிலையாமைக்கருத்துக்கு அழகு சேர்க்கின்றன.*

**நிலையாமைக்கருப்பொருளும் ஓசை நயமும்**

*நிலையாமை குறித்தப் பாடல்களில் அழகிய ஓசைநயம் படிப்பவர் உள்ளத்தை நெகிழச் செய்வதாய் அமைந்துள்ளன. சான்றாக,*

***உண்ணான் ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்***
***..***
***வழங்கான் பொருள்காத்து இருப்பானேல் அஆ!***
***இழந்தான் என்று எண்ணப்படும்.(நாலடியார் -9),***
***உடாஅதும் உண்ணாதும்..(நாலடியார்.10)***
***வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரேல்***
***வைகலும் வைகலை வைகும் என்றுணரார்8***
***வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்***
***வைகலை வைத்துணரா தார். (நாலடியார்.39)***

*என்பனப் போன்ற பாடல்களில் படிக்குந்தோறும் இனிமையான ஓசை நயம் பெற்றுவருகின்றன.*

**நிலையாமை உணர்த்தும் அறம்**

*நான்மணிக்கடிகை, ஏலாதி, திரிகடுகம் உடல் நிலையாமையையும் இளமை நிலையாமையையும் முன்னிறுத்துகின்றன. மேலும் அற நூல்கள் நிலையாமைத் தன்மையினை உணர்த்தி நற்செயல்கள் செய்யவே வற்புறுத்துகின்றன.*

***"கூற்றம் வரவுஉண்மை சிந்தித்து வாழ்வு இனிதே" (இனியவை நாற்பது. 28)***

*என்று உலக உண்மையை அறிந்து வாழும் முறைமை சிந்தித்து வாழ இயம்புகின்றது. மேலும் ஏலாதி வீடுபேறு உய்வதற்கும் நிலையாமை உணர்ந்து செய்யத்தக்கனவற்றைச் செய்து வாழ முன்மொழிகின்றது (ஏலாதி. 21, 24.). இவ்வாறாக இறப்பு வருவதற்கு முன்பே நற்செயல்களைச் செய்து வாழ்க என்றே நேரிடையாகவும் மறைமுகமாகவும் அறஇலக்கியங்கள் கூறுகின்றன.*

***"நாச்செற்று விக்குள் மேல்வாராமுன் நல்வினை***
***மேற்சென்று செய்யப் படும்" (திருக்குறள்.335)***

**நிறைவுரை**

*உலக மெய்யியலாளர் மட்டுமின்றி அறஇலக்கியப் புலவர்களும் நிலையாமையைக் கருப்பொருளாக கைக்கொள்வதற்குக் காரணம் நிலையாமையை உணர்த்துவதன் வழியும் அறக்கருத்துக்களைக் கூற இயலும் என்று நம்பினர். இவர்கள் வெண்பா யாப்பில் அழகிய எளிய நடையுடன் நிலையாமைக் கருத்தைக் கூற முடியும் என்பதனையும் நிரூபித்துள்ளன்.*

**துணைநூல் பட்டியல்**

1. க.சி. அகமுடைநம்பி (ப.ஆ), திருக்குறளில் பொதுமை
2. தண்டபாணி தேசிகர். ச (ப.ஆ),திருக்குறள் உரைக்களஞ்சியம்
3. எஸ்.கௌமாரீஸ்வரி (தொ.ஆ) பதினெண்கீழ்க்கணக்கு
4. பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள்
5. க.ப.அறவாணன், சமூகவியல் பார்வையில் அற இலக்கியக் களஞ்சியம்
6. சு.மாதவன், தமிழில் அறஇலக்கியங்களும் சமண பௌத்த அறங்களும்

**References**

1. *K.C.Agamudainambi., Thirukkuralil Generality*
2. *S.Thandapanidesigar., Thirukkural Texbook*
3. *S.Gwomareeswari., Pathinan keelkanakku*
4. *Parimelalagar., Thirukkural*
5. *K.P.Aravanan, Samugaviya Parvail Ara Ilakkiyak Kalangiyangal*
6. *S.Mathavan, Thamilil Ara Ilakkiyangalum Samana Buddhist Arangalum*